**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC 422/2021 |
| Deposition of witness for Prosecution | : | P.W–1 |
| Name | : | கற்பகவள்ளி, |
| Father Name/Husband Name | : | பாலமுருகன் |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | கூலி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of August 2022.

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் மேலே கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 06.05.2021 ஆம் தேதிக்கு 4 மாதத்திற்கு முன்பு எனது கணவர் பாலமுருகன் இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்துவிட்டார். அதிலிருந்து எனது குடும்பத்திற்கு ஒரே கஷ்டமாக இருந்தது. நான் இது சம்பந்தமாக எனது கணவரின் தங்கையான முருகலட்சுமியிடம் சொன்னேன்.

2. அவர் எதிரி முத்துராமலிங்கம் எனது நாத்தனாரின் குடும்பத்திற்கு கஷ்டமாக இருந்த போது தங்க செயினை வைத்து பூஜை செய்ததாகவும், அதற்கு பின்னர் எனது நாத்தனாரின் குடும்பம் நல்ல முறையில் இருப்பதாக சொன்னார்.

3. என்னுடைய நாத்தனார் என்னிடம் நான் வேண்டுமானால் உங்களுடைய நம்பரை எதிரி முத்துராமலிங்கத்திடம் கொடுத்து உமது வீட்டிற்கு அனுப்பி வைக்கிறேன் என்றார். எதிரி என்னுடைய நம்பரை வாங்கிக் கொண்டு எனது தெருவிற்கு வந்து எனக்கு போன் செய்து வீடு எங்கே இருக்கு என்று கேட்டார். நான் வேலை முடித்து விட்டு வருவதாக சொன்னேன்.

4. எதிரி அன்றைய தினம் 06.00 மணிக்கு என்னுடைய வீட்டிற்கு வந்தார் உங்களுடைய கணவர் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்றும் தங்க செயினை வைத்து பூஜை செய்தால் அதை சரி செய்யலாம் என்றும் உங்களுடைய கஷ்டங்கள் குறையும் என்றும் சொன்னார்.

5. நான் உடனே எனது மகளின் கழுத்தில் இருந்த சுமார் 1 பவுனுக்கு கூடுதலான பட்டைசெயினை எடுத்து எதிரியிடம் கொடுத்தேன். எதிரி அதைப் பெற்றுக் கொண்டு என்னையும் என் தங்கச்சி உடையம்மாளையும் வெளியே இருக்க சொன்னார். பூஜை செய்து விட்டு எங்களை உள்ளே அழைத்தார்.

6. என்னிடம் வாங்கிய செயினை டிபன் பாக்ஸில் வைத்துள்ளதாகவும்,அதை 48 நாட்கள் வைத்து பூஜை செய்ய வேண்டும் என்றும் திறக்கக்கூடாது என்றும் சொல்லிக்

கொடுத்தார். அவர் சொன்ன படி நான் 11.06.2021 ஆம் தேதி பூஜை செய்து கொண்டிருந்தேன். அன்றைய தினம் டிவியில் நியூஸ் பார்த்த போது எதிரியின் புகைப்படத்தை போட்டு பெண்களிடம் தங்க செயினை வாங்கி மோசடி செய்ததாக செய்தி வந்து கொண்டிருந்தது. நான் உடனே எனது டிபன் பாக்ஸை போய் திறந்து பார்த்தேன். அதில் உப்பும் மிளகும் மட்டும் தான் இருந்தது. என்னுடைய செயினை காணவில்லை. ஆஜர் எதிரி என்னை ஆசை வார்த்தை கூறி மோசடி செய்து விட்டார்.

7. அதன் பிறகு என்னுடைய மகள் நான் சொல்லச் சொல்ல புகாரை எழுதினார். 11.06.2021 ஆம் தேதி 07.00 மணியளவில் வந்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(அந்த புகார் மனு அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை இருமுறை விசாரித்தார்கள்.

8. அதன் பிறகு போலீசார் என்னை இரண்டு மூன்று வாரம் கழித்து அழைத்து என்னுடைய நகையை அடையாளம் காட்டச் சொன்னார்கள். புகாரில் நான் இரண்டு பவுன் என்று சொல்லியிருந்தேன். டாலரையும் சேர்த்து சொல்லியிருந்தேன். எனது மகள் டாலரை கழட்டிவிட்டதாக சொன்னாள். அதன் பிறகு சுமார் 1 பவுன் செயினை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக் கொண்டேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. புகார் மனுவை எழுதிய உங்கள் பெண் டிவி நியூசை பார்த்தாரா என்றால் பார்த்தார். நீங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் போது நகையைக் காணவில்லை என்று கூறி டிபன் பாக்சோடு தான் காவல் நிலையம் சென்றீர்கள் என்றால் சரிதான். அந்த டிபன் பாக்சில் உப்பு மிளகு, மஞ்சள்துணி மட்டும் தான் இருந்தது என்றால் சரிதான்.

2. டிபன் பாக்சில் அரிசி இருந்ததாக சொல்லியிருந்தால் அது பொய் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. எதிரியை வேறு எங்கும் நீங்கள் சந்திக்கவில்லை என்றால் சரிதான். உங்களது நாத்தனார் முருகலட்சுமி எதிரியை சந்திக்க கூட்டிச்சென்றாரா என்றால் இல்லை.

3. எதிரி வீட்டிற்கு வந்த அன்றே பூஜை செய்தாரா அல்லது மறுநாள் செய்தாரா என்றால் வந்த அன்றே செய்தார். சம்பவத்திற்கு முன்பு எதிரியை உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். உடையம்மாள் உங்கள் தம்பியின் மனைவி என்றால் சரிதான். உடையம்மாளின் வீடு எங்கு உள்ளது என்றால் இரண்டு வீடுகள் தள்ளி உள்ளது.

4. எதிரி பூஜை செய்வதற்காக வரும் விபரம் உடையம்மாளுக்கு தெரியுமா என்றால் தெரியும். சம்பவம் நடக்கும் போது உங்களுடைய கணவர் பாலமுருகன் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். உங்களுடைய கணவருக்கு எப்போது சம்பவம் தெரியும் என்றால் பூஜை நடந்த அன்று இரவு கூறினேன். பூஜை நடந்த சம்பவம் உங்களுடைய மகளுக்கு தெரியுமா என்றால் தெரியும்.

5. போலீசார் விசாரணையில் உங்கள் மகளுக்கும் சம்பவம் பற்றி தெரியுமா என்றால் அவர்கள் கேட்கவில்லை. பூஜை செய்யும் போது அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு

தெரியமா என்றால் மஞ்சள் குங்குமம் அக்கம் பக்கத்து வீட்டிலுள்ள நான்கு வீடுகளுக்கு கொடுக்க சொன்னதால் கொடுத்தேன். மேற்படி விபரங்களை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் அவர்கள் கேட்கவில்லை. நான் சொல்லவில்லை.

6. கிறிஸ்டோபர், ராஜன் ஆகியோர்களை உங்களுக்கு தெரியுமா என்றால்தெரியாது. நீங்கள் எவ்வளவு நாட்களாக கோவில்பட்டி பங்களா தெருவில் இருந்து வந்தீர்கள் என்றால் சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு இருந்து வந்தோம். புகார் கொடுக்க யார் யார் சென்றீர்கள் என்றால் நானும் எனது கணவரும் சென்றோம். எனது மகள் வரவில்லை.

7. புகாரை நீங்கள் காவல் நிலையத்தில் சென்று தெரிவித்த பின்னர் புகார் மனுவை எழுதினீர்களா என்றால் வீட்டில் வைத்தே எழுதிக் கொண்டு தான் போனேன்.

8. காவல் நிலையத்தில் அடையாளம் காட்டிய நகை உங்களுடைய நகை தான் என்பதை காட்டக்கூடிய ரசீது எதுவும் போலீசாரிடம் கொடுத்தீர்களா என்றால் இல்லை. போலீசார் உங்களிடம் நகையை காண்பித்த பிறகு தான் அதில் டாலர் இல்லை என்ற விபரம் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான்.

9. நீங்கள் சொல்வது போல் சொன்ன நாள் நேரத்தில் எந்த ஒரு பூஜையும் நடைபெறவில்லை என்றாலும். இந்த வழக்கில் சாட்சியான முருகலட்சுமி என்பவர் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய்யாக புகார் மனு கொடுத்துள்ளேன் என்றாலும், வழக்கில் சான்றுப் பொருளாக காட்டப்பட்டுள்ள 9 கிராம் எடையுள்ள செயின் உங்களுடையது இல்லை என்றாலும், நீங்கள் எதிரிக்கு எதிராக புகார் கொடுத்ததால் எதிரிக்கு சொந்தமான நகையை மீட்டு உங்களுக்கு கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.